ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/2 - 2014 මැයි 26 වැනි සඳුදා - 2014.05.26

*1864/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44(2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இந்த திருத்தற் கட்டளை மூலம் அப்பிரிவின் கீழ் விதியாக்கப்பட்டதும் 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான (இறுதியாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதிய 1809/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான) கட்டளையை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளது போன்று திருத்தியமைக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1.
2014, மே 26.

**அட்டவணை**

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் 06 பின்வரும் விதத்தில் திருத்தப்பட்டு பதிலீடு செய்யப்படுகின்றது:-

| | | |
|---|---|---|
| "06. | எந்தவொரு கம்பனியினதும் ஏதேனும் ஒரு தொகை பங்கு வழங்கலை, மாற்றலை, ஒப்படைத்தலைத் தொடர்ந்து வழங்கப்படும் ஏதேனும் பங்குச் சான்றிதழ் அப்பங்குகள் வழங்கப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட திகதியில் திறந்த சந்தையில் பெறப்பட்டது என வரி மதிப்பீட்டாளர்/உதவி ஆணையாளர்/பிரதி ஆணையாளர் /சிரேட்ட பிரதி ஆணையாளர் கருதும் ஒவ்வொரு ரூபா 1,000 இற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும், அத்தகைய பங்குகளின் மொத்தப் பெறுமதிக்கும்" | ரூபா 5.00 |

06-565